**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 164/2011**
**Deposition of witness for prosecution -PW-10**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மரியம் ஆயிஷா |
| Father Name | : | திரு.ஹிப்புரசூல் |
| Village | : | கீழக்கரை |
| Taluk | : | கீழக்கரை |
| Calling | : | இல்லத்தரசி |
| Religion | : | முஸ்லிம் |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 28th day of December 2022.

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா. கடந்த 2010ம் வருடம் ஜனவரி முதல் வாரத்தில் எனது உறவினர் திருமணத்திற்காக கீழக்கரைக்கு வந்தோம். நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்ததால் ஜனவரி 3ம் தேதி சென்னை செல்வதற்காக புறப்பட்டு கொண்டிருந்தேன். அப்போது என் அம்மா அறையில் இருந்த நகையை காணவில்லை என்று சொன்னார்கள். அதன்பிறகு அந்த நகையை தேடினோம். நகையை காணவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் கு.வி

சம்பவம் நடந்த மறுநாள் மோப்பநாய் அங்கு வந்ததா என்றால் ஆமாம். கைரேகை நிபுணர்கள் அங்கு வந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீட்டின் விசேசத்தை முடித்து, வீட்டை பூட்டிவிட்டு அனைவரும் படுக்க சென்றோம் என்றால் ஆமாம். எந்த வகையான நகைகள், எவ்வளவு நகைகள் காணாமல் போனது என்றால்

அது குறித்து எனக்கு தெரியாது. நகைகள் காணாமல் போனதாக நான் கூறுவது பொய் என்றாலும், இந்த வழக்கில் என்னை பொய்யான சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 164/2011**
**Deposition of witness for prosecution -PW-11**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்லமுத்து |
| Father Name | : | திரு.ஆனந்தசுந்தரம் |
| Village | : | திருப்புல்லாணி |
| Taluk | : | கீழக்கரை |
| Calling | : | ரியல் எஸ்டேட் தொழில் |
| Religion | : | இந்து |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 28th day of December 2022.

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பத்தை எப்போது, எதற்காக போட்டேன் என்று தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அ.த.சா.ஆ.8 ஆகும். அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து அ.த.சா.ஆ.9 ஆகும். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியத்தின் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ன் படி அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் கு.வி</u>

நான் கடந்த 30.03.2011 ம் தேதி எனக்கும், களிமண்குண்டு கிராம அலுவலர் முனியசாமிக்கும் வந்த அழைப்பாணையின் பேரில் திருப்புல்லாணி காவல் நிலையத்தில் 12.00 மணிக்கு ஆஜரானதாகவும், கீழக்கரை காவல் நிலைய குற்ற எண். 2/2011, பிரிவு

457, 380 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட செய்யது முகம்மது என்பவரை நீதிமன்ற காவலில் எடுத்துவரப்பட்டவரை எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்க எந்தவித தூண்டுதலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனடிப்படையில் சேக் அலாவுதீன் வீட்டில் வைத்திருந்த பொருட்களை எடுத்து காவல்துறையினரிடம் அவர் ஒப்படைத்தார் என்றும், அதனடிப்படையில் ஆய்வாளர் அத்தாட்சி ஒன்றை தயார் செய்தார் என்றும், எதிரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நான் 2 வதாக கையொப்பம் போட்டுவிட்டு, தற்போது எங்கு, எதற்காக கையொப்பம் போட்டேன் என்று தெரியாது எனவும், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்